**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S.No. | : | 150/2018 |
| | | P/W's | : | PW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | சொக்கலிங்கம் | CASTE | : | |
| S/O | பண்டாரம் | RELIGION | : | இந்து |
| VILLAGE | கச்சிராயிருப்பு | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 56 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.02.2026**

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. 2ம் வாதி அழைத்ததால் சாட்சி சொல்ல வந்தேன், அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்ற அடிப்படையில் எனது நிரூபண வாக்குமூலத்தில் வழக்குச்சொத்து 1ம் வாதிக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன். நான் குடியிருக்கும் இடம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதுதான், அதற்குப்பின் அரசே வீடும் கட்டிக்கொடுத்தார்கள். எனக்கு கொடுக்கப்பட்ட அதே வருடத்தில்தான் வாதிகளுக்கு இடம் கொடுக்கப்பட்டது.

2. எனது சர்வே எண் 6/24. வாதி இடத்திற்கும் அதே சர்வே எண் என்றால் சரியல்ல. வாதிகளுடைய சர்வே எண் 6/22. 1 முதல் 7 பிரதிவாதிகளும் வாதிகளும் உறவினர்கள். 1, 2 பிரதிவாதிகளும் வாதிகளிடம் பிரச்சனை செய்தார்கள். தற்போது வழக்குச்சொத்தில் அதை கிரையம் வாங்கியதாக சொல்லிக்கொள்ளும் லெட்சுமணன் என்பவர் வசித்து வருகிறார். 1ம் வாதி எனது மாமா. வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் வாதிகளிடம் பிரச்சனை செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. எனது சாட்சி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரைணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி